விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

3-ம் இதழ்

26.01.2025 - ஜனவரி

அனைவருக்கும் இனிய குடியரசு தின நல் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் இனிய
வணக்கம்...

19.01.2025 இன்று
இதழை பாராட்டிய
அனைவருக்கும் நன்றிகள்...

குறிப்பாக முசிறி
ஜி.சுந்தரமூர்த்தி, வேலூர்
முத்து ஆனந்த், திண்டுக்கல்
செங்கமலன், வானவன்
மகாதேவி சு.மூன் சுதாகரன்
கடலூர் கடல்.நாகராஜன்,
கல்லிடைக்குறிச்சி
நடேஷ் கன்னா, மலர்மதி,
அ.முகமது நிஜாம்,
சாய் செந்தில்,
அரூர் சென்னா,
குடந்தை பரிபூரணன்,
சென்னை கோபிநாத்,
திருச்சி பத்ரிநாத் மற்றும்
21 நபர்கள் வாழ்த்துக்களை
தெரிவித்தனர்.
முதல் நாள் கருத்து
தெரிவித்தவர்கள்
பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.
மற்றவர்களுக்கும்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகள்...

அனைத்து படைப்பாளிகளின்
படைப்புகளை
வெளியிடுவதில்
பெருமைகொள்கிறோம்...

ர.ஸ்ரீஹரி
ஆசிரியர்

இன்று ஈ இதழ்
29 – சக்தி நகர், ஆதம்பாக்கம் சென்னை
செல் 70940 53241 e.mail : indhrumail@gmail.com

படைப்பாளர்களை வருக... வருக...
என வரவேற்கிறோம்...
7094053241 என்ற
வாட்சப் எண்ணுக்கு அனுப்பவும்.

அழகிய ஆரம்பம்...
இன்ப இதழ்

கவிதைகள்

காதல் எழும் நேரமதில்
கற்பனையில் தேன் மழை தான்
மோதி எழும் பால் கடலில்
முத்தெடுக்கும் மேதினியில்
மன்மதனின் தூதுவனாய்
மலரம்புக் கணை தொடுக்கும்
பொன் கவிஞன்
முத்தானந்த் போற்றி...



குடந்தை பரிபூரணன்

சோதனை

தேநீர் தயாரிக்க
வெல்லம் வாங்க முடியா
ஏழை வீட்டிற்குள் புகுந்தது
மழை வெள்ளம்...

சு.மூன்சுதாகரன்,
வானவன்மாதேவி

கவிதை

எந்தக் கவிதையிலும்
எழுதி விட முடியாது
அவள் அழகை

சோகம்

புன்னகையிலும் கூட
சோகம் கலந்திருக்கிறது
முதிர் கன்னிகளுக்கு

முத்து ஆனந்த், வேலூர்
செல் : 7010482479



அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

சிரிப்பு சிரிப்பு

டாக்டருக்கு ஞாபக மறதி
அதிகமாயிடுச்சுன்னு
எப்படி சொல்ற?

பேஷண்டுகளுக்கு
சிகிச்சை பார்த்துட்டு
பீஸை டாக்டரே
பேஷண்டுக்கு
கொடுக்குறாரே...

- சென்னா, அரூர்.

"எதிர் வீட்டுப் பொண்ணு
"தங்கமான பொண்ணு"டி!"

"எப்படி சொல்றே?!

"வேலைகளை முடிக்கிற
வரைக்கும்
"செல்போனைத் தொட
மாட்டான்னா"ப்
பார்த்துக்கோ!"

முத்து ஆனந்த் வேலூர்

இன்று
இதழை உங்கள்
நண்பருக்கும்
அனுப்பிவையுங்கள்...

இந்திய தேசிய சின்னங்கள்

- தேசிய மரம் - ஆலமரம்
- தேசிய பழம் - மாம்பழம்
- தேசிய நதி - கங்கை
- தேசிய மலர் - தாமரை
- தேசிய பானம் - தேநீர்
- தேசிய உடை - கதர்
- தேசிய நாணயம் - ரூபாய்
- தேசிய பறவை - மயில்
- தேசிய விலங்கு - புலி
- தேசிய ஊர்வன - இராஜநாகம்
- தேசிய தானியம் - அரிசி
- தேசிய கீதம் - ஜனகனமண
- தேசிய காய்கறி - பூசணிகாய்
- தேசிய கொடி - மூவர்ணக்கொடி
- தேசிய இசைகருவி - வீணை
- தேசிய விளையாட்டு - ஹாக்கி
- தேசிய பாரம்பரிய விலங்கு - யானை

மு.இளவரசி, வேலூர்

அழகிய ஆரம்பம்...

இன்று

இதழ்

முரண்பாடுகள்...



இன்று

இதழ் உங்கள்
மொபைலுக்கு வர
7094053241
எண்ணுக்கு
பெயர், ஊர் விபரம்
அனுப்பிவைக்கவும்.

துணுக்குகள்

- கோலார் தங்க வயலில் இருந்து தினமும் 1800 டன் கனிமம் வெட்டி எடுக்கப்படுகிறது. அதிலிருந்து சுமார் 5 கிராம் தங்கம் தான் கிடைக்கிறது.

- மதுரை 1000 கால் மண்டபத்தில் 986 தூண்கள் மட்டுமே உள்ளது. 14 தூண்கள் இல்லை.

- தென்காசி மெயின் ரோட்டில் உள்ள டீ கடைக்கு ரொக்க விலாஸ் டீ கடை என்று பெயர்.

- இங்கிலாந்தின் எதிர் கட்சி தலைவரை நிழல் பிரதமர் என்று அழைக்கின்றனர்.



நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி
செல் 9944284135

இந்த அளவு
பெட்டி விளம்பரம்
வெளியிட
ரூ.100 மட்டுமே...
சிறப்புச் சலுகையாக
அடுத்த இதழில்
இலவசமாக
வெளியிடப்படும்

அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

சிறுகதை



ஒப்பனை

மலர்மதி

ராகினி நிதானமாக
அமர்ந்து ஒப்பனை
செய்து கொண்டிருந்தாள்.
"என்ன ராகினி'
இன்னைக்கு உங்க
ஸ்கூல்ல ஃபங்ஷனா?"
என்று கேட்டாள்அம்மா.
"இல்லையே,
ஏன் கேக்கறே?"
"இன்னைக்கு
அதிகப்படியா மேக்அப்
பண்றியே, அதனால்
கேட்டேன்."

"ஓ'அதுவா?
இன்னையிலிருந்து
ஆன்லைன் கிளாஸ்
எடுக்கப்போறேன்.
அதான்'" என்றாள்
பள்ளிக்கூடத்தில்
ஆசிரியையாக
பணியாற்றும் ராகினி...

"நல்ல" பாம்பு!

அதுல்யா, ரம்யா,
இருவரும்
ஓர் ஆணின் அலறல்
சத்தம் கேட்டு
பதறியடித்துக் கிளம்பினார்கள்...
நடுநிசியில் வீட்டுக்குள் புகுந்த
திருடனைக் கடித்தது
நல்ல பாம்பு!

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.



அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

பாஸ்ட் ட்ராக் கதைகள்



முத்து ஆனந்த்
வேலூர்

செல் : 7010482479

விபத்து

கண் எதிரே "விபத்து"
நடந்ததால் "பிரேக்கப்"பைக்
"கேன்சல்" செய்து விட்டுச்
சரணைப் பார்க்கப் போனாள்
மிருதுளா!

புத்தி

தன் அப்பா திடீரென
இறந்த அதிர்ச்சியால்
வீட்டில் திருடும் பழக்கத்தைக்
கை விட்டான் விக்ரம்!

பிளான்

தன் காதலனை
சந்திப்பதற்காகவே அம்மாவை
நிறுத்தி விட்டுத் தான்
அடிக்கடி கடைக்குச்
சென்றாள் தேவகி!

வேலை

பென்ஷன் பணம் வந்ததும்
முதல் "வேலை"யாகத் தன்
கணவனுக்குப் பிடித்த
"அல்வா" வாங்கினாள்
மணிமேகலை!

கதை

தன் "மனைவி" இறந்த
"கவலை"யை மறக்க
முழு நேரமும் "கதை"
எழுதத் தொடங்கினான் சேகர்!



அழகிய ஆரம்பம்...

இன்று

இதழ்

நூல் அறிமுகம்

பூவுக்குள் ஒரு புதையல்?

உலகப் பூக்களைப்
பற்றிய விந்தையான,
அதிசயமான தகவல்கள்,
செய்திகளின் தொகுப்பு களஞ்சியம்...
கடல் நாகராசன் எழுதிய
பூக்களைப் பற்றிய புதையல்...
நூல் தேவைக்கு -



ஆசிரியர்
கடல் நாகராசன்

அமரகவி பதிப்பகம்
41 - காமராசர் நகர்,
ஆல்பேட்டை, கடலூர்
செல் : 9865354678

நேரம்

- சந்தோசத்தில்
வேகமாய் ஓடும்
- துக்கத்தில்
மெதுவாய் நகரும்
- எல்லா நேரமும் நல்ல
நேரமே
- புத்தகத்தில் செலவழித்தால்
அறிவாளி
- போர்பயிற்சியில்
செலவிட்டால் வீரன்
- அனைவருக்கும்
சமமான 24 மணி நேரம் தான்
- திரும்ப கிடைக்காத
வளம்
- சரியாக பயன்படுத்தினால்
ஒரு நாள் என்பது பண்டிகை
- வீணாக்கினால்
திரும்ப கிடைக்காது.
- முடிந்தால் நேரத்தை சேமித்து
இரட்டையாக்கலாம்.
- இல்லாவிட்டால் நேரம் சரியில்லை
என்று சொல்லிவிட்டுச் சென்று
விடலாம்.
- நல்லதே நினை...
நல்லதே நடக்கும்...
காலமும், உன் வாழ்க்கையும்
உன் கையில்

ஆக்கம் : தி.ரேவதி

இன்று

இதழைப்பற்றிய உங்கள்
கருத்துக்களையும்,
படைப்புகளையும்
7094053241 என்ற
வாட்சப் எண்ணுக்கு
அனுப்புங்கள்...நன்றி...